**Copy of Deposition**

# சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

**அ.வ.எண்.316/2024 நாள் : 17.03.2026**

வா.சா:–1 கௌதம் ஆஜர். சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி(பிரதிவாதி தரப்பில்):–

நான் எந்த வருடத்தில் இருந்து தொழில் செய்து வருகிறேன் என்றால் 2012ம் ஆண்டு முதல். எந்தெந்த ஊரில் தொழில் செய்து வருகிறேன் என்றால் எங்கள் ஊர் பாசூரில் மட்டும. Export செய்கிறேனா என்றால் இல்லை. ஏஜென்ட் மூலம் விற்பனை செய்கிறேன். நான் எங்கு படித்தேன் என்றால் நந்தா இன்ஜினியரிங் கல்லூரி பெருந்துறையில் படித்தேன். எனது பூர்வீகம் எது என்றால் பாசூர். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் 2019ம் வருடம். எனது மனைவி எந்த ஊர் என்றால் திருசெங்கோடு. நான் பைனான்ஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தவிர நான் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதா என்றால் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. பிரதிவாதி எனக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 2019ம் ஆண்டு முதல். பிரதிவாதி எனது மனைவிக்கு உறவா என்றால் இல்லை. என் மனைவியை இந்த வழக்கில் விசாரித்தால் பிரதிவாதி பற்றிய விவரங்கள் கூறுவரா என்றால் கூறுவார். எனது திருமணத்திற்கு பிரதிவாதி வந்தாரா என்றால் வந்தார். எனது திருமணத்தில் போட்டோ, வீடியோ எடுத்தோமா என்றால் எடுத்தோம். அதில் பிரதிவாதி போட்டோவில் உள்ளாரா என்றால் எனக்கு போட்டோவில் உள்ளாரா என்று தெரியாது. எனது திருமண போட்டோவில் பிரதிவாதி இருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். இதற்கு முன்பு பிரதிவாதியிடம் பேசி உள்ளேனா என்றால் 10–15 முறை பேசினேன். பிரதிவாதியிடம் இன்று பேசினேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கும் எனக்கும் வரவு, செலவு தவிர வேறு எதாவது பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. எனக்கு வரவு, செலவு ரூ.6,00,000/– இருப்பதாக கூறும் நிலையில் பிரதிவாதியிடம் இன்று எதாவது பேசினேனா என்றால் இல்லை. ஏற்கனவே பேசும்போது நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார். கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள செந்தில்குமார் என்ன தொழில் செய்கிறார் என்றால் ரியல் எஸ்டேட் செய்கிறார். மற்றொரு சாட்சி

**Copy of Deposition**

ஜெயபிரகாஷ் என்ன தொழில் செய்கிறார் என்றால் அவரும் ரியல் எஸ்டேட் செய்கிறார். செந்தில் நடுப்பாளையம், ஜெயபிரகாஷ் பெருந்துறையை சேர்ந்தவர்கள். நான் ரியல் எஸ்டேட் செய்கிறேனா என்றால் இல்லை. சாட்சிகள் இருவரும் ரியல் எஸ்டேட் தவிர பைனான்ஸ் தொழிலோ, கந்துவட்டி தொழிலோ செய்கிறார்களா என்றால் எனக்கு தெரியாது. என்ன பெயரில் தொழில் செய்கிறார்கள் என்றால் அவ்வாறு பெயர் எதுவும் இல்லை . பிரதிவாதிக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்பது பற்றி தெரியுமா என்றால் ஒரு தங்கை உள்ளார். அவர் எங்கிருக்கிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. பிரதிவாதியின் மகன் மற்றும் மகள் எங்கு படிக்கிறார்கள் அல்லது வேலை செய்கிறார்களா என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் பணம் கொடுக்கும்போது அவர் மகன் படித்துக்கொண்டிருந்தார். என்ன படித்துக்கொண்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மகளுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் தெரியாது. பையனுக்கு திருமணம் ஆகிவிட்டதா, வேலைக்கு செல்கிறாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி என்னை தவிர வேறு யாரிடமாவது கடன் வாங்கி உள்ளாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு வீடு, பூமி உள்ளதா என்றால் வீடு உள்ளது. பிரதிவாதி வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். பிரதிவாதி என்ன கடனுக்காக பணம் கேட்டார் என்றால் குடும்ப செலவு, அவசரத்தேவைக்காக பணம் கேட்டார். அவசர செலவு மற்றும் குடும்ப செலவு பற்றி கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் கொடுத்ததாக கூறப்படும் ரூ.6,00,000/– எனக்கு பெரிய தொகை என்றால் சரிதான். பிரதிவாதி என் மனைவிக்கு என்ன உறவு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி ரூ.6,00,000/– கடன் வாங்க வேண்டிய அவசியம் இருந்திருந்தால் என்ன தேவைக்கு கடன் வாங்கினார் என்று எனக்கு தெரிந்திருக்கும் என்றும், நான் பைனான்ஸ் தொழில் செய்திருந்தால் வட்டிக்காக என்ன தேவைக்கு பணம் கேட்கிறார் என்று தெரிந்து கொள்ளாமல் பணம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. குடும்ப தேவைக்கு என்று பணம் வாங்கினார். பிரதிவாதிக்கு என்னை யார் என்று தெரியாது என்றாலும், எனக்கும் பிரதிவாதியை யார் என்று தெரியாது என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதியை முதன் முதலில் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால்

சரியல்ல. பிரதிவாதி பிரண்ட்ஸ் பைனான்ஸ் குமாரபாளையத்தில் கடன் பெற்றிருந்தார் என்றாலும், அதன் உரிமையாளர் இறந்துவிட்டார் என்றாலும், தற்போது கூட்டாளிகள் என்னை வைத்து பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி பிரண்ட்ஸ் பைனான்சிற்கு செலுத்த வேண்டிய தொகைகளை செலுத்தி விட்டார் என்றாலும் அதிக வட்டி கேட்டு என் மூலமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்என்பதால்தான் பிரதிவாதி பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த வருடம் என்னிடம் கடன் வாங்கினார் என்றால் 2023ம் ஆண்டு கடன் வாங்கினார். ஒரு வருடம் கழித்துதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் வட்டி கொடுத்தார் என்றால் வட்டி எதுவும் கொடுக்கவில்லை ஆனால் வட்டி தருவதாக நம்பிக்கை கொடுத்தார். பிரதிவாதியை கடனை திரும்ப கேட்டு எங்கு சென்று பார்த்தேன் என்றால் பிரதிவாதி வீட்டிற்கு சென்று பார்த்தேன். பிரதிவாதியின் போன் நெம்பர் உள்ளதா என்றால் உள்ளது. பிரதிவாதி எந்த வருடம் வேலையில் சேர்ந்தார் என்று தெரியுமா என்றால் எந்த வருடம் என்று தெரியாது. ஆனால் 25 வருடங்களாக அரசு பணியில் உள்ளார். பிரதிவாதி தற்போது எந்த ஊரில் பணி செய்து வருகிறார் என்றால் திருவள்ளூரில் வேலை செய்து வருகிறார். கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியிலும் தற்போதும் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் கடன் வாங்கிய தேதியில் ரூ.35,000/ to ரூ.38,000/– தற்போது மேலாளராக 2024ம் ஆண்டு பதவி உயர்வு பெற்று கூடுதல் சம்பளம் பெறுகிறார் என்று கேள்விப்பட்டேன். பிரண்ட்ஸ் பைனான்ஸை சேர்ந்தவர்கள் பிரதிவாதி அதிக சம்பளம் பெறுகிறார் என்பதால் என் மூலம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அவ்வாறு யாரையும் தெரியாது. ரூ.6,00,000/– வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். கையிருப்பில் இருந்த தொகையை கொடுத்தேன் அதனால் கணக்கில் காட்டவில்லை. ரூ.6,00,000/– பிரதிவாதிக்கு கொடுக்கும்போது ஏன் RTGS, DDயாகவோ, காசோலையாகவோ கொடுத்திருக்கலாம் என்றால் நிலம் வாங்க கையில் பணம் வைத்திருந்ததால் கையில் கொடுத்தேன். எத்தனை லட்சம் கையிறுப்பு

வைத்திருந்தேன் என்றால் ரூ.15,00,000/- வைத்திருந்தேன். அதன் பின்னிட்டு நிலம் வாங்கினேனா என்றால் இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றாலும் நான் ரூ.6,00,000/- கையிருப்பு வைத்திருந்து பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அரசு வேலையில் இருந்து கொண்டு அவரது தேவைக்கு அதிகமாகவே சம்பளம் வாங்குவதால் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
|---|
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.03.17 16:11:52 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |